


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.10.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், சுடரினை ஏற்றி வைத்து 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.10.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 2025 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பையை அறிமுகப் படுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களின் திறமையை அடையாளம் காணும் வகையில்

# 16 லட்சம் பேர் பங்கேற்கும் 'முதலமைச்சர் கோப்பை' விளையாட்டுப் போட்டிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, அக்.9-**

**சென்னையில் 'தமிழ்நாட்டின் ஒலிம்பிக்ஸ்' என்று போற்றப்படும், 'முதலமைச்சர் கோப்பை' விளையாட்டுப் போட்டிகளை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.**

**அப்போது அவர், ``முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள், மாநகரங்கள் முதல் கிராமங்கள் வரை தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களின் திறமையை அடையாளம் காண துணை நிற்பது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

'தமிழ்நாட்டின் ஒலிம்பிக்ஸ்' என்று போற்றப்படுகின்ற 'முதலமைச்சர் கோப்பை- 2025' (*Chief Minister's Trophy 2025*) மாநில அளவிலான போட்டிகளை உங்களுடன் சேர்ந்து தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

### முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள்

நம்முடைய அரசு அமைந்த பிறகு, ஒவ்வொரு வருடமும், இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை, திருவிழா போல் கொண்டாடி நடத்தி வருகிறோம். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், 2023-ஆம் ஆண்டு துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், நான் போட்ட முதல் கையெழுத்தே முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளை அதிகப்படுத்தி, விரிவாக நடத்த வேண்டும் என்பதுதான்.

2023-ஆம் ஆண்டு சுமார் 3 லட்சம் பேர்தான் இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டார்கள். அது கொஞ்சம், கொஞ்சமாக வளர்ந்து, இந்த வருடம், சுமார் 16 லட்சம் பேருக்கு மேல் இந்தப் போட்டியில் பங்கேற்க இருக்கிறார்கள். முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை, நம் அரசு நடத்த ஆரம்பித்த பிறகு, விளையாட்டை மாபெரும் மக்கள் இயக்கமாக நம் தமிழ்நாட்டு மக்கள் கொண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் மிகமிக முக்கியமான காரணம்.

### தமிழ்நாட்டு வீரர்கள்

விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உங்களையெல்லாம் ஒரே இடத்தில் பார்க்கும்போது எனக்கு எப்போதுமே தனி உற்சாகம் வரும். இன்றைக்குப் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், விளையாட்டுத்துறை சார்ந்து நாம் எடுக்கிற முயற்சிகளால் எண்ணற்ற தமிழ்நாட்டு வீரர்கள் உலகம் முழுவதும் சென்று பல்வேறு சாதனைகளை படைத்திருக்கிறார்கள்.

இந்த மேடையில்கூட சர்வதேசப் போட்டிகளில் பல்வேறு சாதனைகளைப் படைத்த 2 தமிழ்நாட்டு வீரர்கள் நம்முடன் அமர்ந்திருக்கிறார்கள். பாரா பேட்மிண்டன் போட்டிகளில் தொடர்ந்து சாதனைகளைப் படைத்து வரும், தம்பி சுதர்சன் இங்கே வந்திருக்கிறார். உலகளவில் பாரா பேட்மிண்டன் இரட்டையர் பிரிவில் முதல் இடத்தில் இருக்கிறார் தம்பி சுதர்சன் அவர்கள். சர்வதேச, தேசிய அளவிலானப் போட்டிகளில் ஏராளமான பதக்கங்களை வென்று இந்திய ஒன்றியத்துக்கும், தமிழ்நாட்டுக்கு மக்களுக்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளார்.

அவரைப் போலவே ரோலர் ஸ்கேட்டிங் வீராங்கனை தங்கை கார்த்திகா அவர்கள் இங்கு வந்துள்ளார். விளையாட்டின் மீதுள்ள ஈடுபட்டால் பதக்கத்தை மட்டுமல்ல, படிப்பிலும் சாதிக்கலாம் என்று நம் தங்கை கார்த்திகா அவர்கள் சாதித்துக் காட்டி இருகிறார்கள். ரோலர் ஸ்பீடு ஸ்கேட்டிங் (*Roller Speed Skating*) போட்டியில் சாதித்தது மூலமாக தங்கை கார்த்திகா அவர்கள் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில், விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவம் படிக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.




### டாக்டர் வீராங்கனை

விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எம்.ஐ.எம்.எஸ். (MIMS) திட்ட வீராங்கனையான தங்கை கார்த்திகா தொடர்ந்து பல சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். உங்கள் அனைவரின் சார்பாக அவருக்கு ஒரேயொரு வேண்டுகோள். நீங்கள் படித்து மருத்துவரானாலும் விளையாட்டை, நீங்கள் தொடர்ந்து பின்தொடருங்கள், வருகின்ற நோயாளிகளிடமும் அதைப் பின்பற்றச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் என்பது சிறுவர்கள், மாணவர்களுக்காக மட்டுமில்லை. இதில், பொதுமக்கள், மாற்றுத் திறனாளிகள், அரசு ஊழியர்களும் கலந்துகொள்ளலாம் என்ற நிலையை, நம் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி கொடுத்திருக்கிறார்கள். ஆக மொத்தம், விளையாட்டில் ஆர்வம் இருக்கிற எல்லோருக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் முதலமைச்சர் கோப்பையின் நோக்கம்.

திறமையாளர்கள் நகரங்களில் இருந்து மட்டும் வருவதில்லை. கிராமங்களிலும் இருப்பார்கள். மலைக் கிராமங்களில் கூட இருப்பார்கள். ஆனால், அந்த திறமையாளர்களைக் கண்டுபிடித்து, வெளியே கொண்டு வருவது ஒரு அரசின் கடமை. அந்த கடமையைத் தான், இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் மூலமாக முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குச் செய்திருக்கிறார்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத்தொகையாக 37 கோடி ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்களென்றால், இந்த விளையாட்டுப் போட்டிகளுக்கு எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

நம்முடைய அரசு அமைந்த பிறகு, முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்றால், அந்தச் சான்றிதழ்களும், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகிதம் இட ஒதுக்கீட்டின் கீழ், அரசு வேலை வழங்க, கணக்கில் எடுத்துக் கொள்கிறது நம் அரசு. இந்தியாவிலேயே முதன்முறையாக, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை நடத்த கேம்ஸ் மானேஜ்மென்ட் சிஸ்டம் (*Games Management System*) என்ற திட்டத்தையும் நம் அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த சாஃப்ட்வேர், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுகள் சம்பந்தப்பட்ட அத்தனை விஷயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

வெற்றிபெற்றவர்கள் பட்டியல், விளையாட்டு வீரர்கள் பட்டியல், பதக்கப் பட்டியல் எல்லாவற்றையுமே நேரலையில் பார்க்க முடியும். எந்த நேரத்திலும் அதை நீங்கள் சரிபார்த்துக் கொள்ளமுடியும். ஒரே வரியில் சொன்னால், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் சர்வதேசத் தரத்துடன், வெளிப்படைத் தன்மையோடு நடத்தப்படுகின்றன.

> **வெற்றி வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டில் அரசு வேலை!**
>
> **முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்றால், அந்தச் சான்றிதழ்களும், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகிதம் இட ஒதுக்கீட்டின் கீழ், அரசு வேலை வழங்க, கணக்கில் எடுத்துக் கொள்கிறது நம் அரசு.**

எனவே, நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்ய நமது அரசும், முதலமைச்சரும், விளையாட்டுத் துறையும் தயாராக இருக்கின்றன.

நமக்கு போதிய வசதியில்லை, கிராமத்தில் இருந்து வருகிறோம், நம்மால் வெற்றிப்பெற முடியுமா என்று தயவுசெய்து, நீங்கள் யாரும் நினைக்கக் கூடாது. நீங்கள் விளையாட்டுப் போட்டியில் கலந்துக்கொண்ட பிறகு இல்லை. போட்டியில் கலந்துகொள்வதற்கு முன்பே உங்களுக்கு உதவிட 'தமிழ்நாடு சாம்பியன்ஸ் ஃபவுண்டேசன்' திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். அதோடு மட்டுமல்ல, நீங்கள் பதக்கங்களை வென்று வந்த பிறகும், உங்களுக்கு உயரிய ஊக்கத்தொகையையும் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார். உதாரணமாக, தேசிய போட்டிகளில் பதக்கங்களை வென்றவர்களுக்கு, ஒரே மாதத்தில் உயரிய ஊக்கத்தொகையை வழங்க, நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். ஆனால், பல மாநிலங்களில், தேசிய போட்டிகளை நடத்தி ஒரு வருடம் ஆகியும், ஊக்கத்தொகை கொடுக்காமல் இருக்கிறார்கள். தேசிய போட்டிகள் நடந்த ஒரே மாதத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகையை வழங்கினார்.

### ஹிமா தாஸ் சாதனை

இந்தியாவில், சாதாரண பின்னணியில் இருந்து வந்து விளையாட்டில் சாதித்தவர்கள் பலபேர் இருக்கிறார்கள். இந்த மேடையில் ஒரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஹிமா தாஸ் (*Hima Das*) என்ற ஓட்டப்பந்தய வீராங்கனையைப் பற்றி கேள்விப்பட்டு இருப்பீர்கள். அசாம் மாநிலத்தில் உள்ள டிங் என்கிற கிராமத்தில் பிறந்தவர். ஒரு விவசாயியின் மகள். மாவட்ட அளவில் வெற்றிப்பெற முடியுமா என்று தயக்கமாக இருந்தார்கள். மாவட்ட அளவில் வெற்றிப்பெற்று காட்டினார்கள். மாவட்ட அளவில் வெற்றிபெற்று விட்டோம், மாநில அளவிலான போட்டிகளில் நம்மால் கலந்துகொள்ள முடியுமா என்று யோசித்தார்கள். மாநில அளவிலும் தனது முயற்சிகளால் சாதனைகளைப் படைத்தார்கள்.

சர்வதேச அளவில் சாதிக்க முடியுமா என்று யோசித்தார்கள். அவர்களின் பயிற்சியும், திறமையும் சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்ள வைத்துள்ளது. 2018-ஆம் ஆண்டு பின்லாந்தில் (*Finland*) வேர்ல்டு அத்லெட்டிக் அண்டர் 20 சாம்பியன் ஷிப் (*World Athletics Under 20 Championship*) போட்டியில் அவர் கலந்துகொண்டார். அந்தப் போட்டியில் டிராக் ஈவென்ட்டில் (*Track Event*) தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை, அந்தப் பெண்மணி 18 வயதில் படைத்தார். அவர் வாழ்ந்த பகுதியில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படும். அந்தப் பகுதியே பெரிய அளவில் வளர்ச்சி அடையாத இடமாக இருந்தது. ஆனாலும், ஹிமா தாஸ் தன்னுடைய கிராமத்தில் தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டார். பயிற்சிக்காக மைதானத்துக்குச் சென்றால், அன்றைக்கு பெய்த மழையால் மைதானம் முழுவதும் தண்ணீர் நிற்கும். அப்படிப்பட்ட சூழலிலும் சேற்றிலும், சகதியிலும் ஓடி பயிற்சி பெற்றவர்தான் ஹிமா தாஸ். அவருடைய விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் அவரை வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றன.

இன்றைக்கு அந்த வீராங்கனையை என்ன சொல்லி அழைக்கிறார்கள் தெரியுமா? ஹிமா தாஸ் என்று அழைப்பதை விட, அவரின் ஊர் பெயரைச் சொல்லி டிங் எக்ஸ்பிரஸ் என்று ஊரைச் சொல்லித் தான் அழைக்கிறார்கள். இன்றைக்கு ஹிமா தாஸால், வடகிழக்கு மூலையில் அடையாளமே இல்லாமல் இருந்த டிங் என்ற சின்ன ஊர், இன்றைக்கு டிங் எக்ஸ்பிரஸ் என்று சொல்கிற அளவுக்கு அவரின் சொந்த ஊருக்கு புகழைத் தேடி தந்துள்ளார்கள். இதன் மூலம், ஹிமா தாஸ், அசாம் மாநிலத்தில் விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டின் கீழ் காவல் துறையில் பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றுள்ளார்.

விளையாட்டைப் பொறுத்தவரைக்கும் இதைப் போல ஏராளமான உத்வேகங்கள் உண்டு. இங்கு மேடையில் அமர்ந்துள்ள இரண்டு பேர் உட்பட, இங்கு வந்துள்ள உங்களின் திறமை, அனைவருக்கும் உத்வேகமாக அமையும். எனவே, நீங்கள் உற்சாகமாகத் தொடர்ந்து பயிற்சி செய்யுங்கள். ஒவ்வொரு மாதமும் முன்னேற்றத்தைக் காட்டுங்கள். நீங்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும். சமூக வலைதளத்தில் நிறைய கவனச் சிதறல்கள் வரும். அது கடினம்தான்.

இங்கு பேசிய இரண்டு விளையாட்டு வீரர்களும் எவ்வளவு நம்பிக்கையுடன், அவர்களின் உணர்வுகளை உங்களுடன் எடுத்து பேசியதற்கு மிகமிக முக்கியமான காரணம் படிப்பு மட்டுமல்ல, அவர்களின் பயிற்சிதான். அதனால் பயிற்சியில் நீங்கள் கவனம் செலுத்துங்கள். இங்கே இருக்கின்ற உங்களில் பலர், நிச்சயம் நாளை ஒலிம்பிக்கில் பங்கேற்கின்ற வாய்ப்பையும் பெறுவீர்கள். அதற்கான தொடக்கமாக, இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் இருக்கும் என்று உங்களை அத்தனை பேரையும் வாழ்த்துகிறேன்.

### ஒரே ஒரு வேண்டுகோள்

அதே மாதிரி, அரசு ஊழியர்கள் பிரிவில் நிறைய ஆசிரியர்கள் இங்கு வந்துள்ளார்கள். நான் எந்தப் பள்ளி, விடுதி நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும், அங்கு இருக்கின்ற மாணவர்கள் என்னிடம் வைக்கின்ற கோரிக்கையை, ஆசிரியர்களுக்கு எனது கோரிக்கையாக வைப்பேன். ``எங்களின் கணிதம், அறிவியல் ஆசிரியர்கள் விளையாட்டு வகுப்பை கடன் வாங்கி, அவர்கள் பாடம் நடத்துகிறார்கள். அதனால், எங்களை விளையாட விடுவதில்லை. தயவுசெய்து, விளையாட்டு வகுப்பில் எங்களை விளையாட விட வேண்டும் என்று சொல்லுங்கள்" என்று மாணவர்கள் என்னிடம் சொல்வார்கள்.

நானும் அங்கு இருக்கின்ற ஆசிரியர்களிடம், உங்களின் கணிதம், அறிவியல் வகுப்பை எங்களின் விளையாட்டு வகுப்புகளுக்கு கடன் கொடுங்கள். எங்கள் மாணவர்கள் படிப்பில் எப்படி சாதனை செய்தார்களோ, விளையாட்டிலும் நிச்சயம் சாதனை படைப்பார்கள் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். விளையாட்டு வீரர்கள், மாணவர்கள் சார்பாக அதே கோரிக்கையை, இன்று ஆசிரியரிடத்தில் வைக்கிறேன். உங்களின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், திராவிட மாடல் அரசும், நானும், நம் துறையும் என்றைக்கும் துணை நிற்போம் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

களம் நமதே!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் எஸ். ரகுபதி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, ஆஸ்திரேலிய தூதரக அதிகாரி சிலாய் இசாக்கி, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், காரபாக்கம் கணபதி, மருத்துவர் எழிலன், வழக்கறிஞர் பரந்தாமன், ஐடீரீம்ஸ் மூர்த்தி, எபினேசர், பிரபாகர்ராஜா, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், துணை மேயர் மகேஷ்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., எஸ்.டி.ஏ.டி துணைத் தலைவர் அசோக் சிகாமணி, உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., திரைப்படக் கல்லூரி தலைவர் டிராட்ஸ்கி மருது, பாரா பேட்மிண்டன் வீரர் சுதர்சனன், ரோலர் ஸ்கேட்டிங் வீராங்கனை கார்த்திகா உள்பட விளையாட்டு வீரர் வீராங்கனைகள் பலரும் கலந்துகொண்டனர்.